**கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - நிலை 1, கட்டம் II -- 2011**

---

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,236,478,017 ஆக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,465,715,259 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய

ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2011** ரூபா | **2010** ரூபா | ரூபா |
| காணிச் சுவீகரிப்பு | 4,486,862 | 4,283,328 | 26,557,466 |
| நிலையான சொத்துக்கள் | (4,052,375)* | 11,799 | 1,216,349 |
| நடைபெறும் வேலை- - இலங்கை அரசாங்க நிதிகள் | 277,294,808 | 259,979,920 | 659,476,526 |
| - சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி நிதிகள் | 958,748,722 | 1,658,141,531 | 2,778,464,918 |
| | 1,236,478,017 | 1,922,416,578 | 3,465,715,259 |

* எதிர்கால செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதேச அலுவலகத்திற்கு நிலையான சொத்துக்கள் மாற்றப்பட்டிருந்தது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 940,679,740 தொகையான வெளிநாட்டு நிதிகள் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின்படி, இது ரூபா 701,116,613 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 239,563,127 ஆன வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளின்படி சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த கொடுப்பனவுகளிலிருந்து பிடித்துவைத்திருந்த ரூபா 120,376,444 தொகையான பிடிகாசு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது தொழிலாரம்பிப்பு முற்பணங்களின் அறவீட்டிற்காக செய்யப்பட்ட தவறான கணக்கீட்டுப் பதிவுகள் காரணமாக நடைபெறும் வேலைக் கணக்கு மற்றும் வெளிநாட்டு கடன் கணக்கு ரூபா 221,235,144 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பொது திறைசேரியின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 5 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, உள்ளக கணக்காய்வாளர் உரிய நேரத்தில் மற்றும் சிறந்த வழிகளில், மற்றும் வழங்கப்பட்ட பொது வளங்களை வினைத்திறனுடன், ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனத்துடன் பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கலில் அவருடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உதவிபுரிவதாக உள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்டமானது பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக 2011 இல் 35 ஊழியர்களை சேர்த்திருந்தது. 2011 ஆம் ஆண்டில் மிகையான பதவியணியினருக்காக செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட மேலதிக தொகை ரூபா 11,479,070 ஆக இருந்தது.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றும் அவற்றின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2011 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2011 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஜ.யென் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| ஜேஐசீஏ | 3,447 | 3,077.67 | 942.52 | 940.68 | 2,884.92 | 94 |
| இலங்கை அரசாங்கம் | 1,217 | 1,086.61 | 250.00 | 250.00 | 630.56 | 58 |
| மொத்தம் | 4,664 | 4,164.28 | 1,192.52 | 1,190.68* | 3,515.48* | 84 |

(பரிமாற்று வீதம் ஜ.ஜென் 1 = இ.ரூபா 1.12)

* மீளாய்வாண்டிற்காக பயன்படுத்திய நிதிகள் மற்றும் 2011 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முறையே ரூபா 45.80 மில்லியன் மற்றும் ரூபா 49.76 மில்லியன் தேறிய தொழிற்படு மூலதனத்தை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் வேறுபடுகின்றன.

### 4.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டமானது 2012 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையானது 2011 ஆண்டின் இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் அத்திகதியிலுள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட 93.78 சதவீதத்திற்கு எதிராக 89.52 சதவீதமாக இருந்தது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **நடவடிக்கைகள்** | **ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதி** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|
| | | | **நிதிசார் %** | **பௌதீக %** |
| i | முற்பண பொதி 1 –குழாய் வரிசை வழங்கலும் பொருத்தலும் | 2010.02.16 | 95.84 | 100.00 |
| ii | பொதி 2 பக்வோஸ் அறவீடு | 2010.02.25 | 75.08 | 91.04 |
| iii | பொதி 4 வருமானமற்ற தண்ணீர் குறைப்பு | 2010.03.24 | 78.92 | 95.68 |
| iv | பொதி 9 வாகனங்களின் கொள்வனவு | 2008 யூன் | 100.00 | 100.00 |
| v | பொதி 10 –தேசிய போட்டி கேள்வி பொதி | | | |
| | (ஆர்எவ்ஏ) | 2011.09.07 | 64.81 | 93.56 |
| | (எவ்ஏ) | | 80.62 | |
| vi | பொதி 11 –பதவியணியினர் விடுதிகளின் நிர்மாணம் | 2011.02.28 | 51.44 | 87.56 |

| | | | | |
|---|---|---|---|---|
| vii | பொதி 12 – சேவை நீர்த் தேக்கங்களின் நிர்மாணம் (ஆர்எவ்ஏ) (எவ்ஏ) | 2012.05.05 | 55.42<br>83.62 | 93.56 |
| viii | பொதி 13 - ஆலோசனை பொதி (ஆர்எவ்ஏ) (எவ்ஏ) | 2011.12.31 | 77.40<br>61.39 | 96.10 |
| ix | பொதி 14- சுத்தமான தண்ணீர் நீர்த் தேக்கத்தின் நிர்மாணம் | 2012.02.01 | 4.57 | 50.53 |
| x | பொதி 15- பிலோக்குலர் மற்றும் செடிமென்ரேசன் குள நிர்மாணம் | 2012.07.16 | 23.01 | 43.79 |
| xi | பொதி 16- பிலோக்குலர் மற்றும் செடிமென்ரேசன் குளத்தின் நிர்மாணம் | கேள்வி ஆவணங்கள் செயற்பாட்டில் உள்ளது | - | - |